NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 12 January 2022

## செய்திக்கொத்து

# ‘அமெரிக்க–சீன பூசல் 30 ஆண்டுகளுக்குத் தொடரலாம்’

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே இடம்பெற்று வரும் பூசல் 30 ஆண்டுகள்வரை நீடிக்கலாம், அதற்கு சிங்கப்பூர் தயாராய் இருக்கவேண்டும் என்று முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜார்ஜ் இயோ எச்சரித்துள்ளார். கடல் பகுதிகளிலோ மறைமுகமாகவோ போர் மூளலாம் என்று திரு இயோ கூறினார்.

அத்தகைய பிரச்சினையில் சிக்காமல் தனது இறையாண்மையை நிலைநாட்ட சிங்கப்பூர் தென்கிழக்காசியாவில் உள்ள தனது அண்டை நாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு தனக்கென ஓர் அடையாளத்தை உருவாக்கிக்கொள்ளலாம் என்று அவர் குறிப்பிட்டார். அதன் மூலம் சிங்கப்பூரராக இருப்பதை வெறும் குடியுரிமையாக மட்மீன்றி அதற்கும் மேலான ஒன்றாக மேம்படுத்தலாம் என்று திரு இயா சுட்டினார்.

தேசிய பல்கலைக்கழகத்தின் கொள்கை ஆய்வுக் கழகம் ஆண்டுதோறும் நடத்திவரும் கலந்துரையாடல் ஒன்றின் தொடக்கத்தில் திரு இயோ பேசினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.